07.08.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1, A2, A4 to A6 present. A3 absent and his absence condoned as u/s 317 Cr.P.C. petition filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.45 P.M.

**5 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: Special team க்கு வந்திருக்கும் நபர் 5ம் எதிரி முரளி என்பவர் எந்த காவல் நிலையத்திலிருந்து வந்தார் என்பதை பற்றி தாங்கள் விசாரித்தீர்களா என்றால் ?

ப: எனக்கு முந்தைய விசாரணை அதிகாரியால் விசாரிக்கப்பட்டுள்ளது. நான் விசாரிக்கவில்லை.

கே: 5ம் எதிரி எந்த பதவியில் இருந்தார் ?

ப: முதல்நிலை காவலராக இருந்தார்.

கே: அவர் பணியாற்றும் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் இருப்பார் என்றால் ?

ப: ஆமாம்.

கே: அவர் முதல் நிலை காவலராக பணியாற்றியபோது பாபு ரவிச்சந்திரன் அவருடைய காவல் ஆய்வாளர் என்றால்?

ப: தெரியாது.

கே: உயர் அதிகாரி Special team க்கு 5ம் எதிரியை போக சொல்லியிருந்தாலும் அவர் அங்கிருந்து செல்ல வேண்டும் என்ற

குறிப்பானது அந்த காவல் நிலைய Rough duty roaster ல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால்?

ப: என்ன Duty ல் இருக்கிறார் என்று பதிவு செய்யப்பட்டிருக்கும்.

கே: தாங்கள் டிஎஸ்பி கணேசனை விசாரிக்கும்போது குற்ற எண் 206/2015 ல் 5ம் எதிரி ஈடுபட்டிருந்தார் என்று தாங்கள் கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும் என்றும் மேலும், அப்படி அந்த குற்ற பிரிவு வழக்கில் பணி செய்கின்றபோது அவர் எங்கிருந்து வந்தார் என்பதை நான் கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும் என்றால் ?

ப: மேற்படி 5ம் எதிரி ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து சிறப்பு குழுவில் பணியாற்றினார்.

கே: ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து சிறப்பு குழுவில் பணியாற்றியது குறித்து ஆவணத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: ஆவணம் இல்லை. வாய்மொழி உத்தரவு.

கே: 6ம் எதிரி சுரேஷ் என்பவர் வந்தவாசி காவல் நிலையத்தில் பணிபுரிந்தார் என்றும் அங்கிருந்துதான் உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் அவர் Special team க்கு அனுப்பப்பட்டார் எனும்போது அந்த காவல் நிலையத்தின் Duty roaster என்ற ஆவணத்தை தாங்கள் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா?

ப: நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

கே: தாங்கள் இந்த வழக்கு சம்பவம் Official duty ல் இருந்தபோது நடந்ததா அல்லது Private affairs இருக்கும்போது நடந்ததா என்றால்?

ப: Official duty க்கு அப்பாற்பட்டு செய்யப்பட்டுள்ளது.

கே: Official duty அப்பாற்பட்டது என்றால் ஆஜர் எதிரிகள் எந்த நேரத்தில் பணி செய்தார்கள், எப்போது அனுமதியின் பெயரில் வெளியே சென்றார்கள், அனுமதி பெற்றார்களா அல்லது விடுப்பில் சென்றார்களா, பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்களா போன்ற விவரங்கள் அடங்கிய ஆவணங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

ப: இல்லை.

கே: தனிப்பட்ட முறையில் அவர்கள் இந்த சம்பவத்தை செய்தார்கள் என்பதற்கான கண்ணுற்ற சாட்சிகளை யாரையாது தாங்கள் விசாரணை செய்தீர்களா என்றால்?

ப: விசாரித்துள்ளேன். கண்ணுற்ற சாட்சிகளாக அருணாச்சலம் மற்றும் சிவாவை விசாரித்துள்ளேன்.

கே: மேற்கண்ட அருணாச்சலம் மற்றும் சிவாவை நான் விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரியல்ல. அவர்களை விசாரித்தேன்.

கே: மேற்கண்ட சாட்சிகளை நான் விசாரணை செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

ப: அவர்கள் இருவரின் மறுவாக்குமூலங்களை நான் தாக்கல் செய்துள்ளேன்.

கே: எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி திரு.ஆனந்தகுமார் என்றால்?

ப: சரிதான்.

கே: அவர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணிபுரிந்த அனைத்து போலீசார்களையும் விசாரித்துள்ளார் என்றால்?

ப: ஆமாம்.

கே: 15.06.2015 மற்றும் 16.06.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பாரா பொறுப்பில் இருந்தவர்கள் யார் என்றால்?

ப: நிலைய செண்ட்ரி ரிலீப் புக்கை பார்த்துதான் சொல்ல முடியும்.

கே: 15.06.2015 அன்று பாரா டியூட்டியில் காலை 08.00 மணியிலிருந்து காலை 11.00 மணி வரை முத்துக்குமரன் எழுத்தர் என்பவரும் மற்றும் காலை 11.00 லிருந்து மதியம் 01.00 மணி வரை மற்றும் 01.00 மணியிலிருந்து மாலை 06.00 மணி வரை மேற்கண்ட முத்துக்குமரன்தான் இருந்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: மாலை 06.00 லிருந்து இரவு 08.00 மணி வரை மற்றும் இரவு 08.00 லிருந்து மறுநாள் 16.06.2015 காலை 08.00 மணி வரை பாரா பணியில் இருந்தவர் அனுமந்தன் என்றால்?

ப: சரிதான்.

கே: 15.06.2015 GD பொறுப்பில் எஸ்எஸ்ஐ சிங்காரம் காலை 07.00 மணிக்கு பொறுப்பேற்று காலை 08.00 மணிக்கு கலைச்செல்வன் பொறுப்பேற்றுக்கொள்கிறார் என்றும் எஸ்எஸ்ஐ சிங்காரம்தான் காவலர் முத்துக்குமரனை பாரா பணியில் அன்றைய தினம் நியமித்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று காலை 07.00 மணிக்கு ஜிடி என்ட்ரி கலைச்செல்வனால் முடிக்கப்பட்டது என்றால்?

ப: சரிதான்.

கே: 15.06.2015 காலை 07.00 மணி முதல் மறுநாள் காலை 07.00 மணிக்கு முடிக்கப்பட்ட பொது நாட்குறிப்பிலும் அதேபோன்று பாரா டியூட்டியில் காலை 08.00 மணியிலிருந்து மறுநாள் காலை 08.00 மணி வரையுள்ள மேற்கண்ட பதிவேடுகளிலும் ஷமீல் பாஷா சம்பந்தப்பட்ட வழக்காகிய குற்ற எண் 140/2015 என்ற வழக்கின் வழக்கு கோப்பிலும் ஷமீல் பாஷாவின் விசாரணை சம்பந்தமான எந்த தகவலும் அந்த பதிவேடுகளில் குறிப்பிடப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: அதேபோல் ஷமீல் பாஷா வழக்கு சம்பந்தப்பட்ட குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் எதிரிகளை பற்றிய ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அதேபோல் 16.06.2015 ம் தேதி காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை முத்துக்குமரன் பாரா டியூட்டியில் இருந்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று மாலை 06.00 மணியிலிருந்து மறுநாள் காலை 08.00 மணி வரை பாரா டியூட்டியில் சீனிவாசன் என்பவர் இருந்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: அன்று GD பொறுப்பில் இருந்தவர் யார் என்றால்?

ப: எஸ்எஸ்ஐ கலைச்செல்வன்.

கே: அன்று காலை 08.00 மணிக்கு ரோல்கால் முடிந்தவுடன் எஸ்எஸ்ஐ ரவி GD பொறுப்பை எடுத்துக்கொள்கிறார் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று இரவு 07.30 மணிக்கு குற்ற எண் 150/2015 என்ற ஒரு விபத்து வழக்கை எஸ்எஸ்ஐ ரவி பதிவு செய்துள்ளார் என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று இரவு 08.00 மணிக்கு எஸ்எஸ்ஐ ரவி ரோந்துக்கு சென்றுவிட்டார் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று மாலை 06.00 மணிக்கு முத்துக்குமரன் பாரா டியூட்டி முடிந்த பிறகு அவருக்கு எந்த பணியும் ஒதுக்கப்படவில்லை என்றால்?

ப: பாரா பொறுப்பில் இல்லை. ஆனால் நிலைய எழுத்தராக இருந்தார்.

கே: முத்துக்குமரனின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் 16.06.2015 அன்று இரவு 08.00 மணிக்கு அவர் காவல் நிலையத்தில் இருந்ததாகவும், ஷமீல் பாஷாவை தன்னுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டதாகவும் அவர் சொல்லியிருப்பது பொய் என்றும் அவ்வாறு இருந்திருந்தால் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால்?

ப: முத்துக்குமரன் அவருடைய வாக்குமூலத்தில் நிலையத்தில் ஷமீல் பாஷா இருந்ததாக சொல்லியுள்ளார். அன்று இரவு 08.00 மணிக்கு முத்துக்குமரன் அலுவல் முடித்து சென்றுவிட்டதாக சொல்லியுள்ளார். பொதுநாட்குறிப்பில் அவ்வாறு பதிவு இல்லை.

கே: 16.06.2015 அன்று காலை 08.00 மணி வரை அனுமந்தன் பாரா டியூட்டியில் இருந்துள்ளார் என்றும், அவர் ஷமீல் பாஷா என்பவர் 16.06.2015 அன்று விசாரிக்கப்பட்டு அப்போதே ஷமீல் பாஷாவை அனுப்பிவிட்டார்கள் என்று அனுமந்தன் தன்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161 ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால்?

ப: சரிதான்.

கே: எனவே மாலை 06.00 மணிக்குமேல் முத்துக்குமரன் காவல் நிலையத்தில் எந்த பொறுப்பிலும் இல்லை என்றும் அதனால் அவருக்கு எந்த விஷயமும் தெரியாது என்றால்?

ப: சரியல்ல.

கே: எனவே காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் விசாரிப்பதற்காக ஷமீல் பாஷா வைத்திருந்தார் என்று முத்துக்குமரன் சொன்னதாக அவருடைய கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவிட்டிருப்பது திட்டமிட்டு மார்டின் பிரேம்ராஜ் காவல் நிலையத்தில் இருந்தார் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: GD entry லோ, பாரா என்ட்ரியிலோ, குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பிலோ ஷமீல் பாஷாவை மார்டின் பிரேம்ராஜ் விசாரித்தார் என்பதற்கான எந்த குறிப்புகளும் இல்லை என்றால்?

ப: குறிப்புகள் ஏதுமில்லை.

கே: 17.06.2015 ம் காலை தேதி 07.00 மணிக்கு GD பொறுப்பு எஸ்எஸ்ஐ ரவியால் எடுத்துக்கொள்ளப்படடது என்றால்?

ப: சரிதான்.

கே: பாரா பொறுப்பு அன்று காலை 08.00 மணிக்கு முத்துக்குமரன் எடுத்துக்கொள்கிறார் என்றால்?

ப: சரிதான்.

கே: பொதுநாட்குறிப்பை பொறுத்தவரையில் 17.06.2015 காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை எஸ்எஸ்ஐ ரவி என்பவரால் GD பொறுப்பில் இருந்தாலும், அதேபோன்று பாரா பொறுப்பில் முத்துக்குமரன் எனப்வர் இருந்தாலும் பொதுநாட்குறிப்பேடு மற்றம் பாரா பதிவேடு ஆகியவைகளில் எதிரிகளை பற்றிய எந்தவித குறிப்புகளும் இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: அதேபோல் எஸ்எஸ்ஐ ரவியால் விசாரிக்கப்பட்ட குற்ற எண் 140/2015 வழக்கின் Case diary–ம், Rough duty roaster–ம் எதிரிகளை பற்றிய எந்த குறிப்புகளும் கிடையாது என்றால்?

ப: சரிதான்.

கே: முத்துக்குமரன் அருணாச்சலத்தை பற்றி சொல்லியுள்ள வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு முரண்பட்டு காவலர் நந்தகுமார் தன்னுடைய வாக்குமூலத்தில் அருணாச்சலத்தை பற்றி சொல்லியுள்ளார் என்றும், முத்துக்குமரன் தன்னுடைய வாக்குமூலத்தில் அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்ததாகவும், நந்தகுமார் தன்னுடைய வாக்குமூலத்தில் அருணாச்சலம் காவல் நிலையத்தில் இல்லை என்றும் சொல்லியுள்ளார்கள் என்றால்?

ப: நந்தகுமார் அவ்வாறு அவருடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

கே: நான் சொல்வது தவறானது என்றால்?

ப: சரியல்ல.

கே: 17.06.2015 அன்று 1ம் எதிரி காவல் ஆய்வாளர் பலமனேரிக்கு செம்மரக்கடத்தல் விஷயமாக சென்றுவிட்டார் என்றால்?

ப: செம்மரக்கடத்தல் விஷயமாக செல்லவில்லை. 17.06.2015 அன்று இரவு 01.45 மணிக்கு அருணாச்சலம் என்பவருடன் தொடர்புடைய நபர்களை பிடிப்பதற்காக சென்றுள்ளார்.

கே: 17.06.2015 அன்று முத்துக்குமரனை விசாரித்தபோதும், காவலர் நந்தகுமார் விசாரித்தபோதும் ஷமீல் பாஷா மற்றும் அருணாச்சலம் ஆகியோர்கள் பற்றி எந்தவித குறிப்புகளும் CD, GD மற்றும் பாரா பதிவேடு ஆகியவற்றில் இல்லை என்றால்?

ப: ஷமீல் பாஷா மற்றும் அருணாச்சலம் பற்றி குறிப்புகள் இல்லை.

கே: 17.06.2015 அன்று எதிரிகளை பற்றி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்த சென்றதாக எந்தவித குறிப்புகளும் GD, பாரா பதிவேடு மற்றும் குற்ற எண் 140/2015 Case diary ம் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 5ம் எதிரி 18.06.2015 எதிரி சபாரத்தினத்துடன் ஆய்வாளர் பாபு ரவிசந்திரன் என்பவரோடு செம்மரகட்டை குற்ற எண் 206/2015 என்ற வழக்கில் தொடர்புடைய குற்றம் சாட்டப்பட்ட பாலாஜியை தேடி 18.06.2015 அன்று சென்றுவிட்டார் என்றும், 5ம் எதிரி மற்றும் சபாரத்தினம் என்ற எதிரியும் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் சொன்ன நேரத்தில் அவர்கள் அங்கு இருக்கவில்லை என்றும் அவர்கள் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பெயரில் 18.06.2015 அன்று முழுவதுமாக குற்றம்

சாட்டப்பட்ட பாலாஜி என்பவரை தேடி அலைந்துக்கொண்டிருந்தனர் என்றால்?

ப: சரியல்ல.

கே: அதேபோல் 6ம் எதிரி ஆய்வாளர் திருமால் என்பவருடன் உயர் அதிகாரியின் உத்தரவின் பெயரில் செம்மரக்கடத்தல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரான மணி என்பவரை பிடிக்க ஜவ்வாதுமலை சென்றிருந்தார் என்றும், அவர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலோ, அந்த நேரத்திலோ இல்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: 5 மற்றும் 6 எதிரிகள் ஆகியோர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலோ குடியிருப்பிலோ இருந்தார்கள் என்பதற்கான பொதுநாட்குறிப்பேடோ, அல்லது பாரா என்ட்ரியிலோ ஷமீல் பாஷா தொடர்புடைய குற்ற எண் 140/2015 என்ற வழக்கின் Case diary ல் எந்தவித குறிப்புகளும் இல்லை என்றால்?

ப: அந்த பதிவேடுகளில் குறிப்புகள் இல்லை.

கே: மருத்துவர் மாலாவை இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்தபோது அவர் குறுக்கு விசாரணையில் நோயாளியின் Case sheet–ல் நோயாளியின் பெயரும் இல்லை, பணி மருத்துவர் கையொப்பமும் இல்லை, என்னுடைய கையொப்பமும் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றும் என் விசாரணையின்போது அவர் அவ்வாறு சொல்லியுள்ளாரா என்றால்?

ப: என்னுடைய விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

கே: மருத்துவர் சரவணகுமார் என் விசாரணையின்போது ஷமீல் பாஷாவின் கை முழுங்கையில் இரத்தம் கட்டியிருந்தது, அதே

இடத்தில் சிராய்ப்பு காயம் இருந்தது, வலது தோள்பட்டையில் இரத்தம் கட்டியிருந்தது வேறு காயங்கள் இல்லை என்றும், சட்டைகளை கழுட்டி பார்த்தேன் காயங்கள் எதுவும் இல்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் ?

ப: மூன்று காயங்கள் குறித்து சொல்லியுள்ளார். வேறு காயங்கள் இருந்ததாக சொல்லவில்லை.

கே: ஷமீல் பாஷா மருத்துவமனையிலிருந்து தப்பித்து சென்று வேறு சில நபர்களால் தாக்கப்பட்டு அதனால் பின்னிட்டு மருத்துவர்களால் தரப்பட்ட காயச்சான்றிதழில் அதிகபட்ச காயங்கள் எண்ணிக்கையில் அதிகமாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால்?

ப: எதிரிகளால் தாக்கப்பட்டதால்.

கே: எதிரிகள் காவல் துறையில் பணியாற்றியவர்கள் என்பதால் ஷமீல் பாஷாவின் காயச்சான்று மற்றும் உடற்கூராய்வு அறிக்கை ஆகியவற்றில் எதிரிகளால் எந்த இடத்தில் எந்த நேரத்தில் ஏற்பட்டவை என்பதை நிரூபிக்க அவர்களின் செயல்பாடுகள் அனைத்தும் எடுத்து விளம்புகின்ற பொதுநாட்குறிப்பு மற்றும் குற்ற எண் 140/2015 Case diary ல் பதிவுகள் உள்ளதா என்றும், எனக்கு முன்பு விசாரித்த ஆனந்தகுமார் என்பவர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி கொடுத்த பொதுநாட்குறிப்பு மற்றும் Case diary ல் உள்ளதா என்றால்?

ப: ஆவணங்களில் பதிவு ஏதுமில்லை. இதுமாதிரியான செயல்களை பதிவு செய்யமாட்டார்கள்.

கே: மருத்துவர் வேதநாயகம் என்பவரால் மழுங்கி ஆயுதங்களால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் கைப்பற்றுதல் மகசர் மூலம் ஏதேனும் மழுங்கிய ஆயுதங்களையோ மேலும் குற்றப்பத்திரிக்கையில் நான் சொல்லியிருக்கும் கயிறு போன்றவற்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேனா என்றால் ?

ப: இல்லை.

கே: மேலும், காயங்கள் ஏற்பட பயன்படுத்திய ஆயுதங்கள் எந்த வகையில், எப்படி பயன்படுத்தப்பட்டன என்பது குறித்த சாட்சியங்கள் யாரையாவது விசாரித்தீர்களா, அது சம்பந்தமான ஆவணங்கள் எதையாது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளீர்களா என்றால்?

ப: சாட்சிகள் அருணாச்சலம் மற்றும் சிவா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

கே: காயங்கள் ஏற்பட நான் குற்றப்பத்திரிக்கையில் கூறியிருக்கும் காயங்களை ஏற்படுத்த பயன்படுத்தியதாக உள்ள பொருட்களை குறித்து அருணாச்சலம் மற்றும் சிவா ஆகியோர்கள் என் விசாரணையின்போது சொல்லியுள்ளார்களா என்றால்?

ப: சொல்லியுள்ளார்கள்.

கே: நான் பொய்யாக சொல்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: இந்த வழக்கை பொறுத்தவரையில் எதிரிகளை அடையாளம் காட்டக்கூடிய அடையாள அணிவகுப்பு நடத்தினீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: நீதித்துறை நடுவர் எண் 5 அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்த கௌஷ் பாஷா சிபிசிஐடி உளவுத்துறை அதிகாரி தியாகராஜன் ஷமீல் பாஷாவிடமிருந்து வாக்குமூலம் வாங்கியதாக கூறியுள்ளார் என்றும் அதுகுறித்து விசாரித்து ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளீர்களா?

ப: நான் விசாரிக்கவில்லை. ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

கே: 17.06.2015 மற்றும் 18.06.2015 ஆகிய தேதிகளில் 1ம் எதிரியின் கைப்பேசி எண் Call details வாங்கி 1ம் எதிரி எங்கிருந்தார் என்பதை உறுதிபடுத்தும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: 01.07.2015 அன்று சிபிசிஐடி இந்த வழக்கினை எடுத்து 16.07.2015 அன்று கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளபோது நிகழ்வு நடந்தது எங்கு என்பதை குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு வரைபடம் தயாரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளீர்களா என்றால் ?

ப: நான் விசாரணைக்கு எடுத்தபோது குடியிருப்புகள் இடிக்கப்பட்டிருந்ததால் நான் வரைபடம் தயாரிக்கவில்லை.

கே: எனக்கு முன்பு விசாரணை செய்த விசாரணை அதிகாரி ஆனந்தகுமார் அவர்கள் வரைபடம் தயாரித்தாரா என்றால்?

ப: இல்லை.

கே: 06.07.2015 கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பமிட்டுள்ள முத்துக்குமரன் சாவியை கொண்டு வந்ததாகவும், மகசர் சாட்சி கூறியிருக்கும் நிலையில் கதவு

இலக்கம் 2/12ன் சாவியானது எவ்வாறு முத்துக்குமரன் அவர்களுக்கு கிடைத்து என்று விசாரித்த அந்த விசாரணை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: ஆவணம் எதுவும் இல்லை.

கே: Medical record ல் மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர்களிடம் 26.06.2015 அன்று வரை எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் குறிப்பாக எம்ஆர்ஐ ஸ்கேன் ஆகியவற்றை தாங்கள் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா ?

ப: இல்லை.

கே: 19.06.2015 உள்நோயாளியாக மாலை 04.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட In-patient nominal register மற்றும் AE ward memo book ஆகியவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா?

ப: தாக்கல் செய்யவில்லை.

கே: காயங்களை குறிப்பாக யார் ஏற்படுத்தினார்கள், எந்த ஆயுதத்தினால் ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்தும் எந்த இடத்தில் ஆயுதங்கள் மறைத்துவைக்கப்பட்டது அல்லது எங்கிருந்தது என்பது குறித்து குறிப்பாக தங்களால் குற்றம் சாட்டப்பட்டதாக சொல்லப்படுகின்ற நபர்களை அழைத்துச்சென்று சாட்சிகள் முன்னிலையில் அடையாளம் காண்பித்தார்களா ?

ப: இல்லை.

கே: குற்றவியல் நடைமுறை சட்டப்படி அல்லது Police Act ன்படி தங்களால் ஆயுதங்கள் சம்பந்தமாக முறையாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டதா?

ப: எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அப்போது ஆயுதங்கள் எதுவும் இல்லாததால் கைப்பற்றவில்லை. போலீஸ் காவலில் 1ம் எதிரி எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோதும் எதிரி ஒத்துழைப்பு கொடுக்காமல் கேட்ட கேள்விகளுக்கு பதில் எதுவும் சொல்லாமல் இருந்துள்ளார்.

கே: இது சம்பந்தமாக குற்ற எண் 140/2015 வழக்கின் பொதுநாட்குறிப்பிலோ Case diary–லோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: எங்களது சிபிசிஐடி குற்ற எண் 5/2015 வழக்குக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் குறிப்பிடப்படவில்லை.

கே: எஸ்எஸ்ஐ ராஜேந்திரன் அவர்களை எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி விசாரித்தபோது கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் ஆம்பூர் தாலுக்கா காவல் நிலையத்தில் பதிவு செய்த செம்மரக்கடத்தல் வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட டிஎஸ்பி திரு.தங்கவேல் என்பவரை போலீஸ் கஸ்டடி எடுத்து ஆம்பூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டது சம்பந்தமாக பாதுகாப்பு பணிக்கு அதிகாரிகளை ஆம்பூர் துணை கண்காணிப்பாளர் மூலம் நியமிக்கப்பட்டது மேலும், அவர்களது தினசரி நாட்குறிப்பை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சேர்க்கப்படுவது வழக்கம் என்று சொல்லியுள்ளார் என்றும் அந்த தினசரி நாட்குறிப்பை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: காவல் நிலையத்தில் வழக்கு சம்பந்தமாக கைது செய்து காவல் நிலையம் கொண்டுவரும் செய்தி சம்பந்தமாக வான்செய்தி Mike waiting தகவல் சேகரித்து இது சம்பந்தமாக மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிப்பார்கள் என்று அவர் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றும், அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: 5ம் மற்றும் 6ம் எதிரிகள் குற்ற எண் 206/2018 என்ற வழக்கில் அவர்களுடைய Movements ஐ தெரிந்துக்கொள்ளும் வகையில் Call details பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: Special team ல் உயர் அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட 5ம் மற்றும் 6ம் எதிரிகள் அவர்களின் நேரடி கட்டுப்பாடு டிஎஸ்பி கணேசன் மற்றும் வந்தவாசி ஆய்வாளர் 6ம் எதிரிக்கும், பாபு ரவிசந்திரன் ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் 5ம் எதிரிக்கும் கட்டுப்பட்டவர்கள் என்றால்?

ப: அந்த காலக்கட்டத்தில் 1ம் எதிரியின் தலைமையின் கீழ் அவர்கள் செயல்பட்டுள்ளார்கள்.

கே: 6ம் எதிரி சுரேஷ் என்பவரை Police Standing Order படியும் போலீஸ் சட்ட விதிப்படியும் அவர்களின் உயர் அதிகாரிகளாகிய டிஎஸ்பி கணேசனும், வந்தவாசி காவல் ஆய்வாளர் மட்டுமே உத்தரவிட முடியும் என்றும், பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களால் அவர்களுக்கு எந்தவித உத்தரவும் இட முடியாது என்றும் அவர்கள் Speical team ல் இருந்ததால் டிஎஸ்பி

கணேசன் அவர்களே எஸ்பியை கேட்டுத்தான் எங்கு செல்ல வேண்டும் என்று உத்தரவிட முடியும் என்றும் இது காவல் துறை விஷயம் என்பதால் சட்டப்படி தான் நடக்கும் என்றால்?

ப: சரியல்ல.

கே: 5ம் எதிரி இதேபோல் அவரை நியமித்த உயர் அதிகாரிகளின் உத்தரவிற்குத்தான் கட்டுப்பட முடியும் என்றும் குறிப்பாக அவருடைய உயர் அதிகாரி ஆம்பூர் நகர காவல் நிலையத்தை பொறுத்தவரையில் பாபு ரவிசந்திரன் என்பவரின் உத்தரவிற்கு இணங்கியும், Special team ல் இருந்ததால் டிஎஸ்பி கணேசன் மற்றும் எஸ்பி அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் தான் அவர் இயங்க முடியும் என்றும் மார்டின் பிரேம்ராஜ் அவர்களால் உத்தரவிட முடியாது என்றால்?

ப: சரியல்ல.

கே: குற்ற எண் 140/2015 என்ற வழக்கில் முழு விசாரணையையும் எடுத்து நடத்தியவர் எஸ்எஸ்ஐ ரவி என்பது தெள்ளதெளிவாக வழக்கு கோப்பில் உள்ளது மட்டும் இன்றி அவரின் Case diary ம் இருப்பதால் மார்டின் பிரேம்ராஜ் அவர்களுக்கும் மற்றும் எதிரிகள் 2 முதல் 7 ஆகியோருக்கும் குறிப்பாக 5 மற்றும் 6 எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால்?

ப: சரியல்ல.

கே: Custodial death என்று சொல்லும்போது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் ஷமீல் பாஷா என்பவரின் பாதிப்பிற்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 15.06.2015 முதல் 19.06.2015 வரை பணியாற்றிய காவல்

அதிகாரிகளே இதற்கு பொறுப்பாக முடியும் என்றும் Special team ல் ஈடுப்பட்ட குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 என்ற குற்ற வழக்குகளில் விசாரணையில் ஈடுபட்ட எதிரி 5 மற்றும் 6 என்பவர்களை தாங்கள் திட்டமிட்டு எந்தவித சம்பந்தமும் இன்றி குற்ற எண் 140/2015 என்ற வழக்கு சம்பந்தமாக விசாரித்து குற்ற எண் 158/2015 என்ற கு.வி.மு.ச பிரிவு 176 ல் விசாரணை நடத்தியதில் தேவையில்லாமல் இணைத்துள்ளீர்கள் என்றால் ?

ப: சரியல்ல. ஷமீல் பாஷாவை காவல் நிலையத்தில் விசாரணை முடித்து அனுப்பிய பின்பு சிகிச்சையிலிருந்தபோது அவர் இறந்துள்ளதால் அதனால் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கே: இந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரிக்கப்பட்ட வழக்கு குற்ற எண் 158/2015 ஆகும் என்றும் அதனுடன் தொடர்புடைய வழக்கானது குற்ற எண் 140/2015 என்ற வழக்கில் விசாரிக்கப்பட்ட ஷமீல் பாஷாவை 19.06.2015 அன்று கௌஷ் பாஷா நேரடியாக அழைத்து வந்து காவல் நிலையத்தில் அவர் முன்னிலையில் விசாரித்து எந்தவித பாதிப்பும் இன்றி நான் அழைத்துச்செல்கிறேன் என்று அவரே எழுதிக்கொடுத்துள்ளார் என்பதால் குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 என்ற விசாரணையில் ஈடுபட்ட எதிரிகள் 5 மற்றும் 6 என்பவர்களுக்கு இதில் சம்பந்தம் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 ஆகிய வழக்குகளின் Case diary ஐ தாங்கள் கைப்பற்றியிருந்தால் மேலும், அந்த

வழக்கின் Call details ஐ கைப்பற்றியிருந்தால் வழக்கின் எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கோ அல்லது பள்ளிக்கொண்டா காவல் நிலைய குடியிருப்பிற்கோ வந்திருக்க வாய்ப்பில்லை என்பது தெரிய வந்திருக்கும் என்றும் விசாரணை அதிகாரியாகிய தாங்கள் திட்டமிட்டு எந்த ஆவணங்களும் இன்றி இந்த வழக்கில் 5 மற்றும் 6 எதிரிகளை பொய்யாக இணைத்துள்ளீர்கள் என்றும் அதேபோன்று ஏனைய எதிரிகளையும் திட்டமிட்டு இந்த வழக்கில் இணைப்பதற்காக அவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் எஸ்எஸ்ஐ ரவி, எஸ்எஸ்ஐ கலைச்செல்வன் மற்றும் சிங்காரம் மற்றும் 15.06.2015 முதல் 19.06.2015 வரை SHO ஆக இருந்து எஸ்எஸ்ஐ ரவியால் விசாரிக்கப்பட்ட குற்ற எண் 140/2015 வழக்கில் ஷமீல் பாஷா இறப்பு தொடர்பான வழக்கில் Case diary மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கான பொதுநாட்குறிப்பேடு, பாரா எண்ட்ரி ஆகியவற்றில் எதிரிகளின் குறிப்பு எதுவுமில்லாமல் சட்டத்திற்கு புறம்பாக தாங்கள் இணைத்துள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: மேலும், எதிரிகள் ஷமீல் பாஷா பாதிப்பில் ஈடுபடாதபோது எதிரிகளை குற்றமுறு செயல்களில் ஈடுபட்டதற்கான ஆவணங்கள் மற்றும் குற்றமுறு செயலுக்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் இல்லாத நிலையில்

அவர்களை பொய்யாக திட்டமிட்டு இந்த வழக்கில் இணைத்துள்ளேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: 5 மற்றும் 6 ஆகிய எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.21 மணி**

**மறுவிசாரணை – இல்லை.**

Sd/- M.Elavarasan
Principal Sessions Judge
Vellore.